| | |
|---|---|
| TNVR13000557 2025 | சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை<br>முன்னிலை–திரு.ஆர்.சதீஷ், எம்.எல்.,<br>சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை<br>2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 8 ம் நாள் திங்கட்கிழமை<br>**அ.வ.எண்.240/2025** |

1. விஜயா
2. நாகராஜ்
3. வனஜா
4. ரவிக்குமார் ... வாதிகள்

/எதிர்/

1. வட்டார வளர்ச்சி அலுவலர்,
   வட்டார வளர்ச்சி அலுவலகம்,
   ம.ரெட்டியபட்டி, அருப்புக்கோட்டை தாலுகா
   விருதுநகர் மாவட்டம்
2. வருவாய் வட்டாட்சியர்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்
3. வருவாய் கோட்டாட்சியர்,
   கோட்டாட்சியர் அலுவலகம்,
   அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்
4. தமிழ்நாடு அரசு, அதன் பிரதிநிதியான
   விருதுநகர் மாவட்ட ஆட்சியர் மூலமாக ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 08.06.2026 ம் தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.மோகன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் அரசு வழக்கறிஞர்மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தபோதிலும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத நிலையில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

<u>தீர்ப்புரை</u>

தாவாச் சொத்தானது வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக் கோரியும், அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தினை வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதை 1 முதல் 4 பிரதிவாதிகள் எந்த வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்று 1 முதல் 4 பிரதிவாதிகள்மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2.வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்:-</u>**

தாவா சொத்தானது ஆதியில் சுப்பாராஜ் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட கொல்லையிடமாகும். தாவா இடத்தில் மேற்படி சுப்பாராஜ் ஆடு மாடுகள் கட்டும் தொழுவமாகவும், மாட்டுதீவணங்கள் சேகரித்து வைக்கும் இடமாகவும் பயன்படுத்தி வந்துள்ளார். தாவா இடம் கொல்லை காலியிடம் என்பதால் ஷை இடத்திற்கு சுப்பாராஜ் பெயரில் பட்டா ஏதும் ஏற்படவில்லை. அதனால் சுப்பாராஜால் தீர்வை ஏதும் செலுத்திட மார்க்கமில்லாமல் போய்விட்டது. தாவா இடத்திற்கு நில உடமை மேம்பாட்டு திட்டத்தில் சர்வே எண் 165/3 ஆகவும் பின்னிட்டு அது சர்வே எண் 165/4 ஆகவும் இருந்து வந்தது. தாவா சொத்தின் மொத்த அளவு கிழமேலாக 51 அடியும், தென்வடலாக 21 அடியுமாக உள்ளது. மேற்படி இடத்தின் தற்போதைய நத்தம் சர்வே எண் 588/4 ன் ஒரு பகுதியாகும். ஏனெனில் சர்வே எண் 588/4 என்பது ம.ரெட்டியபட்டி கிராம கணக்கின்படி சுமார் 4 ஏக்கர் 30 செண்டை உள்ளடக்கிய பகுதியாகும்.

மேற்படி சுப்பாராஜுக்கு சொக்கராஜ் என்ற மகனும், திப்பம்மாள் (எ) சந்திரா என்ற மகளும் சுப்பம்மாள் என்ற மனைவியும் வாரிசுகளாக இருந்து வந்துள்ளார்கள். மேற்படி சுப்பாராஜ் கடந்த வருடம் இயற்கையாகவே காலமாகிவிட்டார். அவர் காலம் சென்றபின்பு அவரது வாரிசுகளான

சொக்கராஜ், வாதி மற்றும் சுப்பம்மாள் ஆகியோர்கள் தாவா சொத்தினை அடைந்து கொல்லையிடமாகவே வைத்து கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள். மேற்படி சுப்பாராஜின் வாரிசுகளுக்கு இடையே சுப்பாராஜுக்கு பாத்தியப்பட்ட சொத்து குறித்து பிரச்சனை ஏற்பட்டதால் மொத்த சொத்து குறித்து அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.27/2004 தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளபோது மேற்படி சுப்பாராஜின் வாரிசுகளுக்கு இடையே சமரசம் ஏற்பட்டுவிட்டதால் ஷை மொத்த சொத்து குறித்தும் சொக்கராஜ் ஒரு தரப்பினராகவும், சுப்பம்மாள், திப்பம்மாள் (எ) சந்திரா ஒரு தரப்பினராகவும் இருந்து கடந்த 13.09.2006ம் தேதி ஒரு பாகவிஸ்தி பத்திரம் ஏற்படுத்தி கொண்டார்கள். மேற்படி பாகவிஸ்தி பத்திரத்தில் 'ஏ' செட்யூல் சொத்தானது சொக்கராஜ் பாகத்திற்கும், 'பி' செட்யூல் சொத்து சுப்பம்மாள், திப்பம்மாள் (எ) சந்திரா பாகத்திற்கும் ஒதுக்கப்பட்டது. ஷை பாகவிஸ்தி பத்திரத்தில் 'ஏ' செட்யூல் சொத்தில் 4வது லக்கமாக குறிப்பிடப்பட்ட சொத்துதான் இவ்வழக்கின் தபசில் சொத்தாகும். இவ்வாறாக தபசில் சொத்தினை பாகப்பத்திரப்படி அடைந்த சொக்கராஜ் தனது தனித்த அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வந்தார். மேற்படி சொக்கராஜ் கடந்த 31.03.2025ம் தேதி காலமாகிவிட்டார். மேற்படி சொக்கராஜின் மனைவிதான் 1ம் வாதி, அவரது பிள்ளைகள்தான் 2,3,4 வாதிகள். மேற்படி சொக்கராஜ் இறந்தபின்பு தாவா சொத்தினை 1 முதல் 4 வாதிகள் கூட்டாக அதில் அஸ்பெஸ்டாஸ் செட் அமைத்து அனுபவம் செய்து வருகிறார்கள்.

மேற்படி 1 முதல் 4 வாதிகள் கடந்த டிசம்பர் மாதம் 2024ம் வருட வாக்கில் 2ம் பிரதிவாதியை அணுகி தாவா சொத்திற்கு தங்களது பெயரில் பட்டா மாறுதல் செய்து தரக்கோரிக்கை வைத்தபோது தபசில் சொத்து சர்க்கார் புறம்போக்கில் அமைந்திருப்பதாகவும், அதனால் பட்டா வழங்கிட இயலாது எனவும், தாவா சொத்தில் உள்ள அஸ்பெஸ்டாஸ் ஷெட் அமைப்புகளை

உடனே அகற்ற வேண்டும் என்றும் வாதிகளை கடுமையாக எச்சரித்து விட்டார்கள். வாதிகளும் தங்களது கைவசம் உள்ள பதிவு பாகவிஸ்தி பத்திரம் தானசெட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் அசல் வழக்கு எண்.27/2004 சம்பந்த கோப்புகளையும் 2ம் பிரதிவாதியிடம் காண்பித்தும் அதற்கு அவர் எந்த பதிலும் கூறாமல் இருந்துள்ளார். மேலும் தாவா சொத்தினை ஒட்டி வடக்கே உள்ள ஒரு பகுதி இடம் சம்பந்தமாக சுப்பாராமன் வகையறா நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண்.242/2018 ல் ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் தாவா சொத்தும் அதற்கு கிழக்கே உள்ள இடமும் ஷை சொக்கராஜ் மற்றும் திப்பம்மாள் (எ) சந்திராவுக்கு பாத்தியப்பட்ட இடம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளதையும், மேற்படி சுப்பாராமன் தாக்கல் செய்த வழக்கில் தாவா சொத்திற்கு வடக்கே உள்ள இடம் ம.ரெட்டியபட்டி கிராம நத்தம் சர்வே எண் 588/4 என்று வருவாய் ஆவணங்களில் இருப்பதை எடுத்துக்காட்டியும் அதற்கு 2ம் பிரதிவாதி எந்த பதிலும் அளிக்கவில்லை. தொடர்ந்து தாவா சொத்திலிருந்து வாதியை அப்புறப்படுத்த போவதாக தெரிவித்து வரப்படுகிறது. தாவா சொத்தானது உரிமை ஆவணங்களின் படிக்கும், அனுபவத்தின் அடிப்படையிலும் வாதிகளுக்கும் அதற்கு முன்பு அவரது முன்னோர்களுக்கும் பாத்தியப்பட்ட இடமாகும். அந்த வகையில் தாவா சொத்தானது முதல் அனுபவத்தில் உள்ள நபர்கள் என்ற வகையில் வாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக இருந்து வருகிறது. ஆனால் 1 முதல் 4 பிரதிவாதிகள் இதையெல்லாம் கருத்தில் கொள்ளாது செயல்பட்டு வருகிறார்கள். மேற்படி 1 முதல் 4 பிரதிவாதிகள் அரசு அதிகாரிகளாக இருப்பதால் ஷையார்களின் நடவடிக்கைகளை நீதிமன்றம் மூலமாகவே தடை செய்திட இயலும் என்பதால் தாவா சொத்து குறித்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

**3.** இவ்வழக்கில் வாதிகள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில், இவ்வழக்கில் 2ம் வாதி நாகராஜ் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன 1 முதல் 4 பிரதிவாதிகள் அரசு வழக்கறிஞர்மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தபோதிலும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத நிலையில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் எதுவும் முன்னிறுத்தப்படவில்லை.

4. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவெனில், வாதிகள் கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா என்பதேயாகும்.

**5.** வாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாதிகள் தரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதிகள்தரப்பில், தாவா சொத்து ஆதியில் சுப்பாராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்ட கொல்லையிடம் என்றும், தாவா இடத்தில் சுப்பாராஜ் ஆடு மாடுகள் கட்டும் தொழுவமாகவும், மாட்டுதீவணங்கள் சேகரித்து வைக்கும் இடமாகவும் பயன்படுத்தி வந்ததாகவும், தாவா இடம் கொல்லை காலியிடம் என்பதால் ஷை இடத்திற்கு சுப்பாராஜ் பெயரில் பட்டா ஏதும் ஏற்படவில்லை எனவும், மேற்படி சுப்பாராஜ் இறந்தபின்பு அவரது வாரிசுகளான அவரது மகனான சொக்கராஜ், மகளான திப்பம்மாள் என்ற சந்திரா மற்றும் மனைவி சுப்பம்மாள் ஆகியோர் தாவா சொத்தினை அடைந்து கொல்லையிடமாக வைத்து கூட்டாக அனுபவம் செய்து வந்ததாகவும், இதற்கிடையில் சுப்பாராஜின் வாரிசுகளுக்கிடையே சுப்பாராஜுக்கு பாத்தியப்பட்ட சொத்து குறித்து பிரச்சனை ஏற்பட்டதால் மொத்த சொத்து குறித்து அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.27/2004 தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் சுப்பாராஜின்

வாரிசுகளுக்கிடையே சமரசம் ஏற்பட்டு மேற்படி சமரசத்தின்பேரில் ஏற்பட்ட பாகவிஸ்தி பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்து சொக்கராஜுக்கு கிடைக்கப்பெற்று அவர் அனுபவத்தில் இருந்து வந்து, அவர் இறந்தபின்னர் அவரது வாரிசுகளான வாதிகள் கூட்டாக தாவா சொத்தில் அஸ்பெஸ்டாஸ் செட் அமைத்து அனுபவம் செய்து வருவதாகவும், வாதிகள் கடந்த டிசம்பர் மாதம் 2024ம் வருட வாக்கில் 2ம் பிரதிவாதியை அணுகி தாவா சொத்திற்கு தங்களது பெயரில் பட்டா மாறுதல் செய்து தரக்கோரிக்கை வைத்தபோது தாவா சொத்து சர்க்கார் புறம்போக்கில் அமைந்திருப்பதாகக் கூறி பட்டா வழங்கிட மறுத்து தாவா சொத்தில் உள்ள அஸ்பெஸ்டாஸ் ஷெட் அமைப்புகளை உடனே அகற்ற வேண்டும் என்று வாதியை கடுமையாக எச்சரித்து தொடர்ந்து தாவா சொத்திலிருந்து வாதியை அப்புறப்படுத்த முயன்று வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

**6.** வாதிகள் தரப்பில் 2ம் வாதி நாகராஜ் வா.சா.1 ஆக சாட்சியமளித்து, பிராதில் உள்ள சங்கதிகளை குறிப்பிட்டு எடுத்துச்சொல்லி பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கையில், தாவா சொத்து குறித்து வாதிகளின் குடும்பத்தார்கள் ஏற்படுத்திக்கொண்ட பாகவிஸ்தி ஆவணமாக காணப்படுகிறது. வா.சா.ஆ.2, வா.சா.ஆ.4, மற்றும் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கையில், தாவா சொத்து குறித்து சுப்பாராஜின் வாரிசுகள் அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.27/2004 என்ற பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து அவ்வழக்கின் தரப்பினர்கள் இடையே சமரசம் ஏற்பட்டு சமரச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.3, வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கையில் தாவா சொத்து அமைந்துள்ள சர்வே எண்

588/4 ல் தனக்கு பாத்தியப்பட்ட இடம் சம்பந்தமாக சுப்பாராமன் வகையறா இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.242/2018 என்ற வழக்கு தாக்கல் செய்து, அவ்வழக்கில் சர்வே எண் 588/4 ல் அவர் அனுபவம் செய்து வரும் சொத்து அவருக்கு பாத்தியப்பட்டது என்று தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பகரப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்களானது சொக்கராஜின் இறப்புச்சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழாக காணப்படுகிறது. வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்களானது வாதிகளின் ஆதார் அடையாள அட்டை நகல்களாக காணப்படுகிறது. வா.சா.ஆ.14 ஆனது தாவா சொத்தின் புகைப்படங்களாக காணப்படுகிறது.

**7.** வாதிகள்தரப்பில் தாவா சொத்தானது ஆதியில் சுப்பாராஜுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்பது குறித்தும், சுப்பாராஜ் இறந்தபின்பு அவரது வாரிசுகளுக்கிடையே வழக்கு ஏற்பட்டு அவ்வழக்கில் ஏற்பட்ட சமரச தீர்ப்பாணை ஏற்பட்டது குறித்தும், மேற்படி சமரச தீர்ப்பாணையின் அடிப்படையில் ஏற்பட்ட பாகவிஸ்தி ஆவணம் ஏற்பட்டது குறித்தும், அதன் அடிப்படையில் தாவா சொத்து சொக்கராஜுக்கு பாத்தியப்பட்டு, அவர் இறந்தபின்பு வாதிகளுக்கு பாத்தியப்பட்டு வாதிகள் அனுபவம் செய்து வருவது குறித்தும், தாவா சொத்திற்கு வாதிகள் 2 ம் பிரதிவாதி அலுவலகத்தில் பட்டா வழங்க கோரியபோது பட்டா வழங்க மறுத்து தாவா சொத்து சர்க்கார் புறம்போக்கு என்று கூறி வாதிகளை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற முயன்று வருவது குறித்தும் சாட்சியமளித்து அதற்குரிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 முதல் 4 பிரதிவாதிகள் அரசு வழக்கறிஞர்மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த போதிலும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத நிலையில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என தெரிய வருகிறது.

**8.** எனவே, வாதிகள் தங்களது தரப்பு வழக்கை வா.சா.1ன் சாட்சியம் மூலமும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் நிரூபித்துள்ள நிலையிலும் 1 முதல் 4 பிரதிவாதிகள் அரசு வழக்கறிஞர்மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தபோதிலும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத நிலையில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், வாதிகளின் வழக்கு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே வாதிகளின் பிராது, வா.சா.1 ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்களை கருத்திற்கொண்டு வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9.** இறுதியாக, இந்த வழக்கு அனுமதிக்கப்பட்டு, தாவாச் சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தை வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதற்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்று 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 8ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SATHISH

Digitally signed by SATHISH
Date: 2026.06.08 18:19:02 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>வாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>

வா.சா.1 – நாகராஜ் (2ம் வாதி)

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | 13.06.2006 | தாவா சொத்து குறித்து ஏற்பட்ட பாகவிஸ்தி பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.2. | --- | அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையில் நீதிமன்ற அ.வ.எண்.27/2004 வழக்கின் பிராது நகல் |
| வா.சா.ஆ.3. | 02.06.2023 | அருப்புக்கோட்டை சார்பு நீதிமன்ற அ.வ.எண். 242/2018 வழக்கின் ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தின் நகல் |
| வா.சா.ஆ.4. | 30.11.2010 | அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.27/2004 வழக்கின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5. | 30.11.2020 | அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.27/2004 வழக்கின் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6. | 31.01.2025 | அருப்புக்கோட்டை சார்பு நீதிமன்ற அ.வ.எண். 242/2018 வழக்கின் தீர்ப்புரையின் நகல் |
| வா.சா.ஆ.7. | 31.01.2025 | அருப்புக்கோட்டை சார்பு நீதிமன்ற அ.வ.எண். 242/2018 வழக்கின் தீர்ப்பாணையின் நகல் |
| வா.சா.ஆ.8. | 31.03.2025 | சொக்கராஜின் இறப்புச்சான்று |
| வா.சா.ஆ.9. | --- | சொக்கராஜின் வாரிசுச்சான்று |
| வா.சா.ஆ.10. | --- | 1 ம் வாதியின் ஆதார் கார்டு நகல் |
| வா.சா.ஆ.11. | --- | 2 ம் வாதியின் ஆதார் கார்டு நகல் |
| வா.சா.ஆ.12. | --- | 3 ம் வாதியின் ஆதார் கார்டு நகல் |
| வா.சா.ஆ.13, | --- | 4 ம் வாதியின் ஆதார் கார்டு நகல் |
| வா.சா.ஆ.14. | --- | தாவா சொத்திற்குரிய புகைப்படங்கள் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

SATHISH

Digitally signed by SATHISH
Date: 2026.06.08 18:19:10 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
அசல் வழக்கு எண்.240/2025
சீரான/வரைவு தீர்ப்புரை
நாள் : 08.06.2026